# 8 இளையான் குடிமாறநாயனார்

தமிழ் நாட்டின் ஒரு பகுதியாகிய சிறந்த வளமுடைய பாண்டிய நாட்டிலே இளையான்குடி என்ற ஓர் ஊர் உண்டு. அங்கே ''மாறனார்'' எனும் பெயருடைய சிவனடியார் ஒருவர் வாழ்ந்து வந்தார். இவர் வேளாண்மை செய்து அதன்மூலம் அளப்பரிய செல்வத்தைப்பெற்று சிவனடியார்களுக்குத் திருவமுது படைப்பதைப் பெருந்தொண்டாக மேற்கொண்டு வந்தார்.

சிவனடியார் எத்தனை பேரானாலும் தம் இல்லத்திற்கு வந்தவர்களை முகம் மலர்ந்து, கைகள் குவித்து, இனிய சொற்களைக் கூறி வரவேற்று ஆசனத்தில் இருத்தி வழிபட்டுத் திருவமுது செய்வித்து அனுப்புவது வழக்கம். இவ்வாறு சிவனடியார் உள்ளம் மகிழும் வகையில் நாள்தோறும் அவர்களுக்கு அமுது படைத்தமையால் மாறனாருக்கு செல்வமும் பெருகிற்று. அளகாபுரிக்குத் தலைவனான குபேரன் போல் மாறனாரும் இளையான் குடியில் செல்வச் சிறப்புடன் கற்பிற் சிறந்த தம் மனைவியோடு இல்லறத்தை இனிது நடாத்தி வந்தார்.

உலகம் போற்றும் இப்பணியை வழுவாது செய்து வரும் தம் அன்பனாகிய மாறனார்,செல்வம் தேய்ந்து வறுமை நிலை வந்தாலும் அடியார்க்கு அமுதுபடைக்கும் தொண்டை இறுதிவரை செய்யும் மன உறுதி உடையவர் என்பதை உலகுக்குக் காட்ட திருவுளங்கொண்ட சிவபெருமான் மாறனாரிடம் உள்ள செல்வத்தைப் படிப்படியாகக் குறையச்செய்தார். வறுமை நிலையும் வந்தடைந்தது. செல்வ வளம் சுருங்கியபோதும் மாறனார் மனம் சுருங்காமல் தமது பொருள் பண்டங்களை விற்றும், கடன் பெற்றும் அடியார்க்கு அமுதூட்டுவதை விடாது செய்து வந்தார். இதனால் மாறனாரும் அவர் மனைவியும் பலநாள் உணவின்றி இருந்தனர்.

இவ்வாறு இருக்கும் போது ஒருநாள் நள்ளிரவில் சிவபெருமான் அடியார் வேடம் பூண்டு மாறனார் இல்லம் வந்தார். காலமோ மாரி காலம், மாறனார் நிலையோ பல நாள் பட்டினி. எனினும் தமது இல்லத்திற்கு

வந்த சிவனடியாரை எதிர்கொண்டு வரவேற்று அவரது ஈர ஆடைகளையும் களைந்து, மேனி ஈரம் போக்கி உலர்ந்த உடை அணிவித்து அவரை ஓர் ஆசனத்தில் இருத்தினார்.

பின்பு தம் மனைவியாரிடம் சென்று, ''சிவ அன்பர் மிக பசியோடு இருக்கிறார். இவருக்கு அமுதூட்ட என் செய்வோம்'' என்று வினவினார். அதற்கு மனைவியார், ''கையிலும் பொருள் இல்லை, கடன் கொடுப்பதற்கும் யாருமில்லை, இன்று காலையில் வயலில் விதைத்த நெல்லை வாரிக்கொண்டு வந்தால் அமுதாக்கிப் படைப்பேன்.'' என்று கணவருக்குக் கூறினார்.

இதைகேட்ட நாயனாரும் மிகக்களிப்புடன் ஒரு கூடையைக் கையில் எடுத்துக்கொண்டு வயலை நோக்கி நடந்தார். வெள்ளத்தில் மிதந்த நெல் முளைகளைக் கையால் வாரி அள்ளி அதனைக் கூடையில் நிரப்பிக்கொண்டு மீண்டும் வந்து மனைவியிடம் கொடுத்தார். 'உணவு சமைக்க விறகு இல்லையே!'' என்று மனைவி வருந்த, நாயனார் உடனே



வீட்டின் கூரையிலுள்ள தடிகளை அறுத்து விறகாகக் கொடுத்தார். பின்பு கறியமுது ஆக்குவதற்கு வீட்டின் பின்புறம் இருந்த முளைப்பயிர்களைப் பறித்துக்கொண்டு வந்த நாயனார் தம் மனைவியிடம் ''அடியார் பசி தணிக்க விரைவில் அமுது சமைக்க'' என்று கூறினார். அவர் மனைவியும் தம் கைத்திறத்தினால் கறிகள் பல சமைத்தார்.

இவ்வாறு உணவு சமைத்து ஆனதும் நாயனார் சிவனடியாரை அழைப்பதற்காக அவர் இடத்திற்குச் சென்று ''சுவாமி அமுது செய்ய எழுந்தருள வேண்டும்'' என்று கூறிய போது வந்த அடியார் சோதி

வடிவாய்த் தோன்றினார். அதைக்கண்டு மாறனாரும், மனைவியாரும் திகைத்து நிற்கும் போது இறைவன் உமையம்மையோடு இடபவாகனத்தில் காட்சி கொடுத்தார். ''அடியார்க்கு அமுதூட்டும் அரும்பணியைச் செய்த நீயும் மனைவியும் நம் சிவலோகத்தில் இன்புற்று வாழ்வீர்களாக'' என்று அருள் செய்து இறைவன் மறைந்தார்.

## பயிற்சிகள்

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. மாறநாயனார் ஆற்றிய பணி யாது?
2. மாறனார் இல்லத்தில் சிவனடியார் வேடம் பூண்டு வந்தவர் யார்?
3. சிவன் மாறனாரின் செல்வத்தைப் படிப்படியாகக் குறையச் செய்ததன் காரணம் யாது?

## செயற்பாடு

★ உமது ஊரில் உள்ள ஆலயம் ஒன்றிற்குச்சென்று அடியார்களுக்கு அமுது (செய்தல்) செய்வித்தல் நிகழ்ச்சியைப் பார்வையிட்டு அல்லது அதில் பங்குபற்றி அதன் சிறப்பை உமது ஆசிரியருக்கு எடுத்துரைக்கவும். (உமது ஆசிரியருடன் கலந்துரையாடவும்)

## பாடச்சுருக்கம்

★ மாறநாயனார் சிவனடியார்களுக்கு அமுதூட்டும் பணியைப்புரிந்து வந்தார்.

★ மாறனார் வீட்டிற்கு இறைவன் சிவனடியார் போல் வேடம் பூண்டுவந்து அருள்புரிந்தார்.

★ நாம் இறைவன் மீது நம்பிக்கையும், பக்தியும் கொண்டால் இறைவனின் திருவருள் நிச்சயம் கிடைக்கும்.